STELLA MARIS COLLEGE (AUTONOMOUS), CHENNAI 600 086
(For candidates admitted during the academic year 2017 – 2018 & thereafter)

SUBJECT CODE: 17TM/FC/VS44

B.Voc. DEGREE EXAMINATION, APRIL 2019
SECOND SEMESTER

COURSE : FOUNDATION – COURSE
PAPER : VOCATIONAL SANGA TAMIL
TIME : 3 HOURS

MAX. MARKS: 100

பிரிவு - அ

I அனைத்துக் கேள்விகளுக்கும் விடை தருக. (10X 1 = 10)

1. உரையாசிரியர்கள் பலரால் மிகுதியாக மேற்கோள் காட்டப்பட்ட நூல் எது?
2. முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் யாருடையது?
3. "நின் ஆற்றாமை நீங்குக" எனக் கூறியவர் யார்?
4. "நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்"-யார் யாரிடம் கூறியது?
5. 'நின்ற சொல்லர்; நீடுதோறு இனியர்' - யார்?
6. "ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே"-யார்?
7. "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" எனக் கூறியவர் யார்?
8. கடையெழு வள்ளல்களில் நால்வரைக் குறிப்பிடுக:
9. 99 மலர்கள் பற்றிக் கூறும் நூல் எது?
10. ஆற்றுப்படையில் 'ஆறு' என்னும் சொல் எதைக் குறிப்பிடுகிறது?

II கோடிட்ட இடங்களை நிரப்புக. (5 X 1 =5)

1. நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்ட நூல் ____________ ஆகும்.
2. திணை என்பது ____________ குறிக்கும்.
3. புறப்பொருள் பற்றிய நூல் ____________ ஆகும்.
4. சீறியாழைப் பயன்படுத்துபவர் ____________.
5. காப்பியப்பாட்டு என அழைக்கப்பெறுவது ____________.

III பொருத்துக (5 X 1 = 5)

1. அதியமான் - (அ) குறிஞ்சி
2. கோப்பெருஞ்சோழன் - (ஆ) பேரியாழ்
3. கபிலர் - (இ) ஔவை
4. பெரும்பாணர் - (ஈ) நற்றிணை
5. பன்னாடுதந்த மாறன் வழுதி - (உ) பிசிராந்தையார்.

IV நான்கனுக்கு இடம்சுட்டிப் பொருள் விளக்குக: (4 X 4 =16)

1. "நீர் இன்று அமையா உலகம் போல"
2. "நிலம் தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்".
3. "பழி எனின், உலகுடன் பெறினும் கொள்ளலர்"
4. "யாண்டு பல ஆக, நரை இல ஆகுதல்"
5. "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய"
6. "புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து இழிதர"

## பிரிவு - ஆ

V எவையேனும் மூன்றனுக்கு வினாக்களுக்கு விடை தருக (3 X 8 = 24)

1. தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்குத் தோழி கூறும் ஆறுதலைக் குறுந்தொகைப் பாடல் மூலம் விளக்குக.
2. தலைவன் தன்னை விட்டுப் பிரியமாட்டான் எனத் தலைவி தோழிக்கு கூறியது யாது?
3. பரிசில் தராமல் தாமதப்படுத்தும் அதியமானிடம் ஔவையார் கூறியவற்றைத் தொகுத்துரைக்க?
4. ஏழு வள்ளல்களின் கொடைத் தன்மையை எழுதுக.
5. தலைவியை நீரிலிருந்து எடுத்துத் தலைவன் காப்பாற்றியதைக் கபிலர் பாடல் மூலம் விளக்கு.

VI இலக்கிய வரலாறு (ஒன்றனுக்கு) (1 X 15 = 15)

1. குறுந்தெகை
2. புறநானூறு
3. சிறுபாணாற்றுப்படை

## பிரிவு - இ

VII நாடகம் (ஒன்றனுக்கு) (1 X 15 = 15)

1. பொம்மக்காவின் மூன்று பெண்கள் எனும் நாடகத்தில் இடம்பெறும் நவீன நல்லதங்காள் வீரப்பண்புகளை எழுதுக.
2. பெண் உரிமைப் பேசும் போராளி - நவீன திரௌபதி குறித்து விளக்குக.
3. பொம்மக்காவின் மூன்று பெண்கள் எனும் நாடகத்தின் வழி உணர்த்தப்படும் பெண் விடுதலைக் குறித்து ஆராய்க.

VIII கடிதம் (ஒன்றனுக்கு) (10 X 1 = 10)

தனியார் நிறுவனத்தில் மேலாளர் பணி வேண்டி விண்ணப்பம் வரைக.

(அல்லது)

கல்லூரி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவி ஊரிலுள்ள தன் அன்னைக்கு எழுதும் கடிதம்.

*******